1979 ஏப்ரல் 28]

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இது இரகசிய தஸ்தாவேஜு இல்லை. பத்திரிகையில் வந்து விட்டது. இப்பொழுது சப்ரஸ் பண்ணுவதாக இருக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி சொன்ன ** என்ற வார்த்தையை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(4) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 41 (3)-வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) சில தனியார் கல்லூரிகள் சட்டத்தை மீறி நன்கொடை வசூலிப்பது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"சட்டத்தை மீறி சில தனியார் நிர்வாகங்கள் கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பதால் ஏழை பெற்றோர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் சிறுபான்மையினர் நடத்தும் கல்லூரிகளில் கட்டாயமாக நன்கொடை வசூலிக்கப்படுகிறது என்ற புகார் எழுத்து மூலமாக ஏதும்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பெறப்படவில்லை, எனினும் ஒப்புதல் பெறாது கல்லூரிகளில் நன்கொடை வசூல் செய்வதைப் பற்றிய அரசு ஆணை 1581, கல்வி, நாள் 4—10—1972-ல் தனியார் கல்லூரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி வசூல் செய்யப்படும் நன்கொடை தொகையினை மானியக் கணக்கீட்டிற்கு வரவினமாக எடுத்துக்கொள்ளப்படும். இவ்வாறு எடுத்துக்கொள்வதால் நிர்வாகத்திற்கு அரசு மானியம் அந்த அளவிற்குக் குறையும்.

மற்றும் தமிழ்நாடு தனியார் கல்லூரிகளின் ஒழுங்காற்றுச் சட்டம் 1976, விதி எண் 28-ன்படி, தனியார் கல்லூரிகளில் எந்தவிதமான நன்கொடையும் முன் அனுமதி பெறாமல் வசூல் செய்யக் கூடாது.

தனியார் கல்லூரிகளில் (சிறுபான்மைக் கல்லூரிகள் உட்பட) நன்கொடை வசூல் செய்வது தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால், அவ்விஷயத்தை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் ஆலோசித்து, அக்கல்லூரிக்கு வழங்கிய அங்கீகாரத்தை திரும்பப் பெறவோ அல்லது பல்கலைக்கழக விதி முறைக்கு உட்பட்ட பிற நடவடிக்கைகளோ மேற்கொள்ளலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, சில தனியார் கல்லூரி களில் மாணவர்களைப் புதிதாக சேர்க்கும்போது அந்தக் கல்லூரியினுடைய முன்னேற்றத்திற்காகவும், கல்லூரியினுடைய கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், லேபரட்டரி போன்ற வசதிகளைப் பெருக்குவதற்காகவும் தங்களுக்கு நிதி தேவைப்படுகிறது என்று சொல்லி, அதற்காக நன்கொடைகள் வேண்டுமென்று சொல்லி, நன்கொடைகள் கொடுப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து சேர்க்கின்ற நிலைமை இருக்கிற காரணத்தால், பெற்றோர்களால், அப்படிப்பட்ட நல்ல கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், அங்கே நன்கொடை கணக்குகள் வந்தால், அரசு மானியத்திலே அந்த அளவிற்குக் குறைத்துக் கொடுக்கப்படும் என்று. அரசு மானியத்திலே குறைத்துக் கொடுப்பதற்கு முன்னாலே, அவர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தி, அதன்மூலம் நன்கொடைகள் வசூலிக்கிறார்கள். அதைப்பற்றி அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதைத தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் ஏதாவது நன்கொடை வசூலிக்க வேண்டுமென்றால், அரசினுடைய முன்னுரிமை பெற்றுத்தான் அப்படிச் செய்ய வேண்டுமென்று விதி ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு மாறாகச் செய்கிறார்கள் என்ற புகார் வருமானால், நாம் நிச்சயமாக விசாரித்து நடவடிக்கை எடுப்போம். அது நிரூபிக்கப்பட்டால், சம்பந்தப்

பட்ட பல்கலைக்கழகத்தை ஆலோசித்து அங்கீகாரத்தைக்கூட ரத்து செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்வோம் என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துள்ளேன்.

(ஆ) பெத்தநாய்க்கன்பாளையத்தில் ஆழ்துளை குடிநீர் குழாய் கிணறுகள் பழுதுபார்க்கப்படாமை குறித்து.

திரு. சி. பழனிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"பெத்தநாய்க்கன்பாளையத்திலுள்ள ஆழ்துளை குடிநீர் குழாய்க் கிணறுகள் பழுதுபார்க்கப்படாததால், அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் 8 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, அவைகளில் கைப்பம்புகளும் பொருத்தப்பட்டுள்ளன. தற்சமயம் மேற்கூறிய 8 கைப்பம்புகளில் 1, 6 மற்றும் 9 வார்டுகளிலுள்ள கைப்பம்புகள் பழுதடைந்த நிலையிலுள்ளன. மீதமுள்ள 5 கைப்பம்புகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

அரசு அங்கீகரித்த கைப்பம்புகள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகளிலுள்ள சிற்றூர்களிலும், குடிநீர் வடிகால் வாரியத்தாலும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், சமுதாய நலத் துறை ஆகிய அமைப்புகளால் நிர்மாணிக்கப்பட்ட ஆழ்துளை குழாய்க் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள கைப்பம்புகளின் பராமரிப்பை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுள்ளது. ஆகவே, பேரூராட்சிகளிலுள்ள கைப்பம்புகளின் பராமரிப்பு அந்தந்த பேரூராட்சிகளைச் சாரும். ஆகவே, பெத்தநாயக்கன்பாளையத்திலுள்ள பழுதடைந்த 3 கைப்பம்புகளைப் பராமரிப்பது, அந்த பேரூராட்சியைச் சார்ந்ததாகும். மேலும் அரசுக்கு கைப்பம்புகள் பழுதுபார்க்காமல் இருப்பது குறித்து தகவல் கிடைத்தவுடன், அவைகளை உடனே பழுதுபார்த்து இயங்க வைக்குமாறு குடிநீர் வடிகால் வாரியத்தை அரசு கேட்டுக்கொண்டுள்ளது. விரைவில் அவை சீர் செய்யப்படும்.